©
தமிழ்நாடு அரசு
2021

# தேனி மாவட்ட அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது

தேனி, ஜனவரி 19, 2021
தை 6, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு-2052 [ எண் 1

பொருளடக்கம்

| | | பக்கங்கள் |
|---|---|---|
| (1) | நீதித்துறை அறிவிக்கை | 1 – 125 |
| (2) | உள்ளாட்சித்துறை அறிவிக்கை | 126 – 129 |

## நீதித்துறை அறிவிக்கை

I

(ந.க.எண்:37416/2020/ஜி4, நாள்:14-12-2020)

### பதிவுருக்களை அழித்தல்

இதனால் அறிவிக்கப்படுவது யாதெனில் உபயோகமற்ற ஆவணங்களை அழிப்பது சம்பந்தமாக, அவைகளின் மேல் ஏற்பட்ட மேல்முறையீட்டு வழக்குகளிலோ மற்றும் சில்லரை நானாவித வழக்குகளிலோ அல்லது நடவடிக்கைகளிலோ தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஆவணங்களை இந்த அறிவிப்பு மாவட்ட அரசிதழில் வெளியான மூன்று மாதங்களுக்குள் திரும்பப் பெற்றுக் கொள்ளாவிட்டால் மேற்படி நாளுக்குப் பின் மேற்படி ஆவணங்களை (தஸ்தாவேசுகள்) பரிகரிக்கப்படும்.

ஒப்பம் .......................................,
*முதன்மை மாவட்ட நீதிபதி,*
*தேனி.*

## உள்ளாட்சித்துறை அறிவிக்கை

II

(ந.க.எண்:36771/2020/ஜி4, நாள்:28-12-2020)

சின்னமனூர் நகராட்சி

குடிநீர் உபவிதிகளுக்கு திருத்த வரைவு
(ந.க.எண்.6152/2016/இ2, நாள். 04.12.2020)

பொது அறிவிக்கை

சின்னமனூர் நகராட்சியின் குடிநீர் கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும், விலைவாசி பலமடங்கு அதிகமாக உள்ளதாலும், பணியாளரமைப்பு செலவினம், குடிநீர் விநியோக பராமரிப்பு செலவினம், மின் கட்டணம் மற்றும் குடிநீர் விநியோக கடனுக்குரிய வட்டி கட்ட வேண்டியுள்ளதாலும், கீழ்க்காணும் விவரப்படி குடிநீர் கட்டண விகிதங்களை திருத்தி நிர்ணயம் செய்ய சின்னமனூர் நகராட்சியின் நகர்மன்றத் தீர்மான எண்.812, நாள்.04.02.2020-இல் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | தற்போது நடைமுறையிலுள்ள உபவிதி எண் மற்றும் கட்டண விவரம் | திருத்தியமைக்கப்பட்ட உபவிதி எண் மற்றும் கட்டண விவரம் |
|---|---|---|
| 12 (அ) | குடியிருப்பு உபயோகம்<br>10000 லிட்டர் வரை மாதாந்திர கட்டணம் ரூ.60/-<br>10000 லிட்டருக்கு மேல் வரும் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.6/- | 10000 லிட்டர் வரை மாதாந்திர கட்டணம் ரூ.120/-<br>10000 லிட்டருக்கு மேல் வரும் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.12/- |
| 12 (ஆ) | வணிக உபயோகம்<br>10000 லிட்டர் வரை மாதாந்திர கட்டணம் ரூ.80/-<br>10000 லிட்டருக்கு மேல் வரும் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.8/- | 10000 லிட்டர் வரை மாதாந்திர கட்டணம் ரூ.150/-<br>10000 லிட்டருக்கு மேல் வரும் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.30/- |
| 12 (இ) | தொழிற்சாலை உபயோகம்<br>10000 லிட்டர் வரை மாதாந்திர கட்டணம் ரூ.150/-<br>10000 லிட்டருக்கு மேல் வரும் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.15/- | 10000 லிட்டர் வரை மாதாந்திர கட்டணம் ரூ.300/-<br>10000 லிட்டருக்கு மேல் வரும் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.50/- |

| | | |
|---|---|---|
| 2 (ஈ) | – | தண்ணீர் வரி (Water Cess)<br><br>மூன்று மாதத்திற்கு கட்டணம் ரூ.5/–<br>(Water Cess)<br><br>தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்துவதற்காக |
| 3 (ஈ) (1) | நிர்ணயிக்கப்பட்ட குடிநீர்க் கட்டணம் குறிப்பிட்ட காலத்தில் அதாவது காலாண்டு முடிவு பெற்ற அடுத்த மாதத்தின் 20ம் தேதிக்குள் செலுத்தாத இணைப்பிற்கு தவணை ஒன்றுக்கு ரூ.30/– அபராத கட்டணமாக வசூல் செய்யப்படும் | நிர்ணயிக்கப்பட்ட குடிநீர்க் கட்டணம் குறிப்பிட்ட காலத்தில் அதாவது காலாண்டு முடிவு பெற்ற அடுத்த மாதத்தின் 20ம் தேதிக்குள் செலுத்தாத இணைப்பிற்கு தவணை ஒன்றுக்கு ரூ.50/– அபராத கட்டணமாக வசூல் செய்யப்படும் |

ஒப்பம் ...................,
*ஆணையாளர்,*
*சின்னமனூர் நகராட்சி,*
*தேனி மாவட்டம்.*

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் மதுரை அரசு கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.